# <u>வீராச்சல ஶ்ரீராமசந்த்ர ஸுப்ரபாதம்</u>

ஶ்ரீமதே ஶ்ரீ வராஹ மஹா தேசிகாய நமஹ

ஶ்ரீமதே ரங்க ராமானுஜ மஹாதேசிகாய நமஹ

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

ஶ்ரீரங்கம் ஶ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் ஶ்ரீ ரங்க ராமானுஜ மஹாதேசிகன் பூர்வாச்ரமத்தில் அருளிய பல ஸ்தோத்திர படைப்புகளில் சிலவற்றை ஸ்தோத்ராவளீ என்ற தொகுப்பாக வந்தது.

ஹைதராபாத்தில் ஸ்வாமி ஸம்ஸ்கிருத ஆசிரியராக அல்வால் என்ற இடத்தில் எழுந்தருளியிருந்த போது வீராச்சலத்தில் இருக்கும் சக்கரவர்த்தி திருமகன் ஶ்ரீராமனுக்கு ஸுப்ரபாதம் பாடி அருளினார். இது பலஸ்ருதியுடன் சேர்த்து 30 ஸ்தோத்திரங்கள் கொண்டது. நம் ஆசார்ய வள்ளலின் இப்படைப்பை அர்த்தத்துடன் ஒவ்வொன்றாக சேவித்து அனுக்கிரஹம் பெறுவோம்

<u>**ஸ்லோகம்**</u> 1

**கௌசல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்$^{4}$யா ப்ரவர்த்ததே।**

**உத்திஷ்ட$^{2}$ நரசார்தூ$^{3}$ல கர்தவ்யம் தை$^{3}$வமாஹ்நிகம்॥1॥**

<u>**அர்த்தம்:**</u>

மனிதர்களில் மிக உயர்ந்தவனே, கௌசல்யை மிகச்சிறந்த குழந்தையைப் பெற்றாள். கிழக்கு வெளுத்து விட்டது. தேவர்கள் தங்களுடைய வைதீக காரியங்களைச்

செய்ய வேண்டும். தயவு செய்து எழுந்திரு. (மானுஷ அவதாரம் ஆகையால் சக்கரவர்த்தி திருமகன் செய்ய வேண்டிய கர்மாக்களை இது நினைவூட்டுவது போலிருக்கிறது. ஆனால் தைவீகமான எல்லாக் கார்யங்களுக்கும் அதிபதியான எம்பெருமான் எதிரே எழுந்தருளியிருக்கும் பொழுது, அவன் ஸந்நதியிலே நாங்கள் எல்லோரும் தெய்வகாரியங்களைச் செய்ய வேண்டும். அதற்காக எழுந்தருளவேண்டும் என்று ப்ரார்த்திப்பது மிகப் பொருத்தமாயிருக்கும்)



**ஸ்லோகம் 2**

**உத்திஷ்டோ$^2$த்திஷ்ட$^2$ கோவிந்த$^3$**

**உத்திஷ்ட$^2$ கருட$^4$த்வஜ।**

**உத்திஷ்ட$^2$ கமலாகாந்த த்ரைலோக்யம்**

**மங்க$^3$ளம் குரு ॥2॥**

**அர்த்தம்:**

சேதனர்கள், பக்தர்கள் எங்கிருந்தாலும் அவர்களை தேடிச் சென்று அனுக்ரஹம் செய்பவனே(கோவிந்தா), பெரியதிருவடியைக் கொடியாகக் கொண்டவனே, பெரிய பிராட்டியின் கணவனே, தயவு செய்து எழுந்திரு. மூன்று உலகத்தையும் மங்களமாகச் செய்.

**பதிவிறக்கம்**

அடியேன் தாஸன்

சித்ரா அமுதன்

(Vadodara)

